Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 11/2024

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09-ம் தேதி திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 6 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | கொத்தனார் வேலை |
| பெயர். | - | முருகன் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | தண்டபாணி | சமயம் | - | |
| கிராமம் | - | குடமுரட்டி | வயது | - | 38 |

09.02.2026

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது குடமுரட்டி கிராமத்தில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன வேலு என்பவரை தெரியும். எதிரியை தெரியும். நான் கொத்தனாராக வேலை செய்து வருகிறேன். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு இரவு சுமார் 09.30 மணியளவில் நானும், வேலுவும் வேலைக்கு ஆள் கூப்பிடுவதற்காக எங்கள் ஊரிலிருந்து மண்டபம் கிராமத்திற்கு என்னுடைய இருசக்கர வாகனமான TN32AA7881 என்ற ஸ்பெலண்டர் இருசக்கர வாகனத்தில் சென்றோம்.

2.நாங்கள் மண்டபம் கூட்டு ரோடு அருகே சென்று கொண்டிருந்த போது எனது இருசக்கர வாகனம் பஞ்சர் ஆகிவிட்டது. அதனால் மீண்டும் வீட்டிற்கு வரலாம் என்று முடிவு செய்து நான் எனது வண்டியை தள்ளிக்கொண்டு முன்னால் சென்றேன். எனக்கு பின்னால் வேலு என்பவர் நடந்து வந்துகொண்டிருந்தார்.

3. நாங்கள் சென்று கொண்டிருந்த போது பாலம் அருகே எங்களுக்கு பின்னால் வந்த TN32AC4870 என்ற பஜாஜ் டிஸ்கவர் வாகனம் அதிவேகமாகவும், ஆரன் அடிக்காமலும் வந்து வேலு மீது மோதியது. அந்த வண்டி 10 அடி தூரம் சென்று கீழே விழுந்து தீத்தி

கொண்டே சுமார் 35 அடி தூரம் சென்றது. நான் சென்று பார்த்த போது வேலு என்பவருக்கு தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. பின்புஆம்புலன்ஸிற்கு தகவல் தெரிவித்தேன். அவ்வழியாக வந்த நெடுஞ்சாலைக்கு சொந்தமான ஆம்புலன்ஸில் வேலுவையும், எதிரியையும் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று சிகிச்சைக்காக சேர்த்தேன்.

4. மருத்துவர்கள் வேலுவை பரிசோதனை செய்து அவர் இறந்துவிட்டதாக தெரிவித்தார்கள். எதிரியை மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். விபத்தை குறித்து வேலுவின் உறவினருக்கு தகவல் தெரிவித்தேன். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 11/2024

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09-ம் தேதி திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 7 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 7 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர். | - | கருணா | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | பாவாடை | சமயம் | - | |
| கிராமம் | - | குடமுரட்டி | வயது | - | 38 |

09.02.2026

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

நான் தற்போது குடமுரட்டி கிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன வேலு என்பவரை தெரியும். அவர் எனது சித்தப்பா. சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு இரவு சுமார் 09.30 மணியளவில் எனது சித்தப்பாவிற்கு விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் தெரியவந்தது. நான் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனை சென்று பார்த்த போது அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தார்கள். பின்பு மறுநாள் அவரின் பிரேதத்தை பிரேத விசாரணை செய்யும் போது உடனிருந்தேன். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.